*Available online at:* [http://www.advancedscientificjournal.com](http://www.advancedscientificjournal.com)
[http://www.krishmapublication.com](http://www.krishmapublication.com)
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 238- 243, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# தமிழ் வளர்த்த 'கயப்பாக்கம் சதாசிவம்'

**Dr. R. Saravanan[1] and Ramesh R[2]**

[1]*Assistant Professor & H.O.D.Guide & Supervisor, PG & Research Department of History, Pachaiyappa's College, Chennai 600030, Tamil Nadu*
[2]*Ph.D. (Part-Time) Research Scholar, PG & Research Department of History, Pachaiyappa's College, Chennai -600030,*

**ஆய்வு சுருக்கம்**

*தமிழ் மொழியில் இன்று கிடைக்கக்கூடிய இலக்கியம், இலக்கணம், மருத்துவம் மற்றும் கலை நூல்கள் அனைத்தும் ஒரு காலத்தில் ஓலைச் சுவடிகளில் இருந்தவை. ஓலைச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களை அவ்வளவு எளிதாக சராசரி மனிதர்களால் படித்துவிட முடியாது. ஓலைச் சுவடிகளையெல்லாம் சேகரித்து, அதில் உள்ள எழுத்துக்களைப் படித்து, அதனை பாமரனும் எளிமையாக புரிந்துகொள்ளும்படி புத்தகமாக வெளியிடும் கடினமான வேலையை, அன்று தமிழ் மீது பற்று கொண்ட நல்ல உள்ளங்கள் நமக்காக செய்திருக்கின்றன. அவர்களைப் பற்றிய ஒரு ஆய்வுதான் இந்தக் கட்டுரை. அந்தவகையில்,"கயப்பாக்கம் சதாசிவம்" அவர்களின் அற்பணிப்பு, வரலாற்றில் மறக்க முடியாத செயலாக இவ் ஆய்வின் வழியே நினைவூட்டப்படுகிறது.*

*"ஒய்வரியா ஓலைச்சுவடி தேடிய நாயகன்,*
*அச்சு வடிவ தமிழுக்கு அழகு சேர்த்த திருமகன்.*
*சைவத்தின் அழகு தமிழ் எழுத்திற்கு,*
*குறிப்புரையும் விரிவுரையும் எழுதிய குலமகன்.*
*கயப்பாக்கம் உயற்திரு சதாசிவம்."*

*சைவமும்,வைணவமும் போட்டி போட்டுக்கொண்டு தன்னை இந்த மண்ணில் நிலை நிறுத்திக்கொள்ள முயற்சி செய்கையில், மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு, அதன் துணையோடு எண்ணிலடங்கா காவியங்களுக்கு, எழுத்து வடிவமாய், ஓவியமாய் ஓலைச்சுவடிகளில் கொடுத்து, காப்பியங்கள் பல படைத்ததும் இந்த மண்ணில்தான். அப்படி ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துக்களை, நவீன காலத்திற்கு தகுந்தாற்போல் அச்சுவடிவம் கொடுத்து, அதனை பொதுமக்களிடம் கொண்டுசேர்க்கும் முயற்சியினை முன்னெடுத்ததும் இந்த மண்ணிலிருந்துதான்.மக்கள் பயன்பாட்டில் உள்ள ஒரு மொழியை, அவ்வளவு எளிதாக அதன் அடையாங்களை அழித்துவிடமுடியாது. மொழிக்கு வலுசேர்க்கவும், அதன் கருத்துகளுக்கு உயிர்கொடுக்கவும், கருத்தாளர்களை அடையாளம் காணவும் முன்னெடுக்கப்பட்ட செயலில் முந்தி நின்றவர் கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள். மக்கள் விரும்பும் பேச்சாளராக, அவர் வாழ்ந்த காலத்தில் சிறப்புற்று இருந்தார். சதாசிவம் அவர்கள் 'திராவிட வேதத் திரட்டு" என்னு புத்தகத்தில், கோயில்கள் பற்றிய சுருக்கமும், சிவரகசியம், மகேதி காசம் (வடமொழி தமிழ் மொழிபெயர்ப்பு)*



©2023 by KRISHMA PUBLICATION

*அகத்தியர் தேவார திரட்டு விரிவுரை ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். சேக்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலுக்கும், திருக்கயிலாய ஞான உலா என்ற நூலுக்கும் குறிப்புரை எழுதி வெளியிட ஏற்பாடு செய்தார்.*

**முக்கிய வார்த்தைகள்:**

*சைவத்தின் வழியே தமிழை தழைக்கச் செய்த சிந்தனைவாதி." திராவிட வேத திரட்டு நூல் - சேக்கீழார் பிள்ளைத்தமிழும்- சதாசிவத்தின் குறிப்புரையும் -சைவ வித்யா மாத இதழ் - சென்னையில் சைவத்தொண்டு- சைவசமய பக்த ஞான சபை 1904- சத்வித்யா சன்மார்க்க சங்கம்- பன்னிரு திருமுறைகள் பற்றி சிறு விளக்கம்.*

**முன்னுரை:**

ஆதி நிலத்தில் மருதமாய், காலப்போக்கில் தொண்டை மண்டலமாய், நவீன காலத்தில் உருமாறிய செங்கல்பட்டு மாவட்டமாய், செய்யூர் வட்டத்தில், சித்தாமூர் ஒன்றியத்தில் அமைந்துள்ள தற்போதைய"கயப்பாக்கம்" வரலாற்றில் எப்போதும் நிரந்தரமாய் தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

"வரலாற்றில கயப்பாக்கம்", சங்க கால மனிதன் வாழ்ந்தான் என்ற எச்சங்களோடும், சோழர் கால கோவில்களோடும், கொற்கை வழிபாட்டின் மிச்சங்களோடும், விஜயநகர மற்றும் நாயக்கர் ஆட்சியாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட கோவில் கட்டுமானங்களோடும், அதற்கு ஆதாரமான கல்வெட்டுக்களோடும் தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பான சீர்மிகு சிற்றூர்.மேல்மருவத்தூர், அச்சிறுப்பாகத்திற்கு கிழக்காக பத்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

கயப்பாக்கம் சதாசிவ இளமைப்பருவம் (1872)

சதாசிவம் 1872 ஆம் ஆண்டில் சென்னையில் கயப்பாக்கம் ரத்தினத்திற்கு மகனாய்ப் பிறந்தார். பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து 1894 இல் பி .ஏ.பட்டம் பெற்றார். சிறுவயதிலேயே சிவ பூஜை செய்வதிலும், தேவாரம் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உடையவராக விளங்கினார். அந்நாளில் புகழ்வாய்ந்த சிவனடியார்கள் கூட்டத்தில் உறுப்பினராக சேர்ந்து, தேவாரம் பாராயணம் செய்து வந்தார். சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை அன்பர்கள் சிலரை அழைத்துக்கொண்டு தக்கோலம் என வழங்கும் திரு ஊறலுக்குச் சென்று, உழவாரப்பணி செய்து, சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார்.

தமிழ், வடமொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்றறிந்தார். பன்னிரு திருமுறைகளை நாளும் ஓதியும், சாத்திரங்களை பயின்றும் பிறருக்கு கூறிவந்தார். ஆத்திகத்தில் ஆர்வம் மேலிட வேலையை விட்டு விலகினார்.

மூர்த்திகள் பலரைச் சந்தித்தார். சிதம்பரம் ஜி. கே. பழனியப்பன் அவர்களின் பாடசாலையில் பணிபுரிந்த ஆசிரியரும், தில்லைத் திருக்கோயில் ஓதுவாருமான திரு. நடராஜ ஓதுவாரையும், வேறு மூவரையும் சென்னை கந்தகோட்டம் பிரம்மோற்சவத்தில் திருமுறை பாராயணம் செய்ய ஏற்பாடு செய்தார்.இவ்வாறு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு. சதாசிவம் சென்னை சிவனடியார் திருக் கூட்டத்தை விட்டு விலகி" சைவ சமய பக்த ஜன சபையை 1904 ஆம் ஆண்டில் சென்னையில் நிறுவினார்.

சிறுவர் சிறுமிகளுக்கு தேவார பாராயணம் செய்ய ஏற்பாடு செய்தார். மாணவர்களை நன்கு பாடச் செய்தார். மாணவ மாணவிகளுக்கு சைவ வினா விடையையும் சொல்லி வைத்துச் சைவ சமயத்தில் பற்று ஏற்படும்படி செய்தார்.அக்காலத்தில் சதாசிவத்திற்கு உற்ற துணையாய் இருந்து, சபை வளர்ச்சிக்காக பல ஆக்கப்பூர்வமான வேலைகளை செய்தவர்களில் திரு கந்தசாமி அவர்கள் முக்கியமானவர்.

**திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் எழுதிய எழுத்துக்களின் தொகுப்பாளி.**

"சைவ சித்தாந்த பதிப்பகம் சதாசிவம் அவர்களைக் கொண்டு கி பி 1927 பிப்ரவரி மாதம் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத்தையும், கிபி 1928 பிப்ரவரி மாதம் திருநாவுக்கரசர் இயற்றிய தேவாரத்தையும், கிபி 1929 சுந்தரர் இயற்றிய தேவாரத்தையும், தனித்தனி நூல்களாக அச்சிட்டு வெளியிட்டது. "[1]

"மணிமேகலை நூலை எழுதியவர் கூலவாணிகன் சாத்தனார். புரசை அட்டாவதானம் சபாபதி, மாணாக்கர் திருமயிலை சண்முகம் அவர்களால் பார்வையிடப்பட்டு, கயப்பாக்கம் சதாசிவம் அவர்களின் முன்னுரையோடு, ரத்தினத்தின் குமாரர் முருகேசனால் சென்னை மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையில் 1894 ஆம் வருடம் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது."2

"கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் 1872 முதல் 1929 வரை தனது தமிழ் தொண்டினை தீவிரமாக செய்துள்ளார். அவர் எழுதிய புத்தகங்கள் ஏராளம். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அதிகம். அகத்தியர் தேவாரத் திரட்டு, சேக்கிழார் பிள்ளைத்தமிழ், திருக்கைலாய ஞான உலா போன்ற நூல்களுக்கு குறிப்புரையும் விரிவுரையும் எழுதி வெளியிட்டார்"3.

மூவர் தேவாரங்களை சிறந்த முறையில் வரிசைப்படுத்தி பதிப்பிக்க செய்துள்ளார்.தனது தமிழ்த் தொண்டினை நிறுத்திவிடாமல், ஓலைச்சுவடிகளை

எல்லாம் திரட்டி, அதில் உள்ள கடுமையான புரிந்துகொள்ளமுடியாத எழுத்துக்களை எல்லாம் படித்து, அதனை சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் பதிப்பித்து, தமிழ் சமூகத்திற்கு வழங்கியுள்ளார்.

**"திராவிட வேதத்திரட்டு" நூலின் படைப்பாளி.**

"சதாசிவம் அவர்கள் திரட்டிய மிக முக்கியமான நூல்தான்"திராவிட வேத திரட்டு" என்பதாகும். கயப்பாக்கம் திரு சதாசிவம் அகழாய்வு செய்து தொகுத்து எழுதிய திராவிட வேதத் திரட்டு என்னும் அரிய நூல் 1908 ஆம் ஆண்டு முதல் பதிப்பாக வெளிவந்தது. .அந்த தொகுப்பில் தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரண்டு சைவத் திருமுறை நூல்களிலிருந்தும், ஏறக்குறைய மூவாயிரம் திருப்பாடல்கள் நல்ல முறையில் தொகுத்து அமைத்திருந்தார். இதுமட்டுமில்லாமல் தேவாரப்பாடல் பெற்ற திருக்கோயில்களின் பெருமை, இறைவன், இறைவி பெயர்கள், அவற்றுக்கு செல்லும் வழி, வாயில்களின் விளக்கம் முதலியவற்றையும் இந்நூலின் இடையிடையே புத்தகங்களில் அடியில் எழுதப்பட்டு வெளியிட்டார்.இப்படி கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினை பாராட்டிய அப்போதிய கலா புத்தக நிலையம், தாங்கள் நூத்தி மூன்றாவது வெளியீடாக திராவிட வேத திரட்டு என்னும் இந்த புத்தகத்தை மணிகளுக்குள் சிறந்த மணியை தேர்ந்து எடுத்தது போல், அழகினுள் அழகு தேடி பாசுரங்களை தொகுத்து இருக்கின்றார். உள்ளிருக்கும் உயர்ந்த ஒவ்வொரு கருத்தையும் காகிதமும் அச்சும் கூடிய மேற்கொண்டு உயர்ந்திருக்கிறது. திருமுறை படிக்காதவரையும் படிக்கும்படி தூண்டதக்கவையாக இருக்கிறது என்று கலா புத்தக நிலையத்தின் உரிமையாளர் திருமதி செந்தமிழ்ச்செல்வி தனது கருத்தை புத்தகத்தில் வெளியிட்டு இருக்கிறார்."[4]

**சேக்கீழார் பிள்ளைத்தமிழ்-கயப்பாக்கம் சதாசிவத்தின் குறிப்புரை.**

"தெய்வப்புலவர் சேக்கிழார் பெருமானார் உருவாக்கிய நூல் திருத்தொண்டர் புராணம் ஆகும். இந்நூலைப் பெரியபுராணம் என்று வழங்குவதே வழக்கத்தில் வந்துவிட்டது. இந்நூல் பலரால் பல வகையில் குறிப்புரைகள் எழுதப்பட்டு அச்சாகி வெளிவந்துள்ளது.

சேக்கிழார் மாண்பையும், பெரியபுராணத்தின் திட்பப நுட்பப் பொருட் சிறப்பையும் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள், தம் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலில் திறம்படப் பாடி அமைத்துள்ளனர். இத்தகைய நூலுக்கு, சைவத் திருவாளர் கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள், ஒரு குறிப்பு எழுதியுள்ளனர். இக் குறிப்புரை முன்னைய குறிப்புரையைவிட முற்றிலும் மாறுபட்டது."[5]

**"சைவ வித்யா" மாத இதழ்**

தமிழில் வெளியான,தினசரி, வார, மாத மற்றும் பருவ இதழ்கள் பற்றி நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை இலக்கிய இதழ்களை பற்றியும், அரசியல் இதழ்களைப் பற்றியும் மேற்கொள்ளப்பட்டவையே. அரிதிலும் அரிதாக கலை அறிவியல் உள்ளிட்ட இதழ்களைப் பற்றிய ஆய்வுகள் நடந்துள்ளன. ஆனால் சமயம் சார்ந்தும், சாதிகள் சார்ந்தும் வெளியான இதழ்கள் குறித்து விரிவான தளத்தில், பரந்து விரிந்த பார்வையில் இதுவரை ஆய்வுகள் நடந்ததாக தெரியவில்லை. ஆகவே

சைவ சமயம் தொடர்பாக பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடங்கி, இப்போது வரை வெளியாகும் மாத இதழ்களைப் பற்றி, கடந்த ஓராண்டாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், சதாசிவம் அவர்களைப் பற்றியும் அவர் நடத்திய மாத இதழ் பற்றியும் தகவல் முக்கியமானது. சைவத்தின் பால் ஈடுபாடு கொண்ட கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள், தமிழின் பால் பேரன்பு கொண்டிருந்தார் என்பதற்கு இந்த ஒரு குறிப்பு சாட்சியாகும். வடமொழியில் உள்ள சைவ நூல்களை தமிழாக்கம் செய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே கயப்பாக்கம் சதாசிவம் ஆசிரியராகக் கொண்டு வெளியான "சைவ வித்தியா"[6] மாத இதழாக செயல்பட்டிருக்கிறது என்ற குறிப்பு நமக்கு கிடைத்துள்ளது. இந்த குறிப்பு வளம் என்ற இணையதளத்தில் எஸ் சொக்கலிங்கம் என்பவர் எழுதிய கட்டுரையில் இருந்து நமக்கு கிடைத்துள்ளது.

**பெரிய புராணச் சொற்பொழிவு**

"1918 ஆம் ஆண்டு, சதாசிவம் அவர்கள் தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவார்கள் இசையோடு பாடுவது மட்டும் அல்லாமல் திருப்பதிகம் முழுவதையும் ஓதச் செய்வார்கள். அப்படி ஓதத் தெரியாதவர்களை இவர்கள் சபைக்கு அழைக்க மாட்டார்கள். இது உயர்ந்த உன்னத நல்ல செயல். இசையோடு வந்த தேவாரம் அதனை இசையோடு ஓதச் செய்வதே சாலச் சிறந்தது ஆகும். இவ்வகையில் சைவ சமயம் பக்த ஜன சபை நூறு ஆண்டுகளாகத் தேவாரம் ஓதுவதயும் வளர்த்தார்கள்.தேவாரம் 12 திருமுறை தொடர்பான சொற்பொழிவுகளை வளர்த்தார்கள் என்கிறார் தமிழ்நாட்டின் தலைசிறந்த ஓதுவாரான தருமபுரம் சுவாமிநாதன் அவர்கள்.. அய்யா அவர்கள் தொடங்கி வைத்த 12 நாட்களும் திருமுறை இசை. இது காலம் காலமாக நடந்து வருகிறது சதாசிவம்அவர்களின் அயரா உழைப்பு முக்கிய காரணம். "[7]

**"லோகோபகாரி பதிப்பகத்தாரின்" பாரட்டு.**

"லோகோபகாரி பதிப்பகம் தனது விமர்சனத்தை கயப்பாக்கம் திரு சதாசிவம் அவர்களைப் பற்றியும்,

அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை பற்றியும், கீழ் வருமாறு பதிவு செய்துள்ளது. இந்த புத்தகத்தில் மூவர் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் முதலிய பன்னிரு திருமுறைகளிலும், திருப்புகழ் திரட்டிய அரிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன என்றும், மூவர் தேவாரத்தில் சிறந்த பாடல்கள் இதில் திரட்டப்பட்டு இருக்கின்றன என்றும், இதில் 274 தலங்களில் மூவர் பாடிய பாடல்கள் அடங்கியிருக்கின்றன என்றும், சிவன் கோவில்கள் உள்ள இடங்களை சென்று வழிபாடு செய்ய விரும்பும் அன்பர்களுக்கு இது சிறந்த துணையாகவும், இதனைத் திரட்டி தொகுத்து அளித்த அன்பர் தமிழறிஞரும் சைவப்பெரியாருமான கயப்பாக்கம் உயர்திரு சதாசிவம் என்றால் இது பற்றி விரித்து உரைத்தல் வீணாகும் என்றும். சைவ சமயத்தை பின்பற்றும் ஒவ்வொருவரிடமும், இந்த நூலின் ஒரு பிரதி இருக்கவேண்டும் என்றும், இது அவர்களுக்கு உயர் துணையாக இருக்கும் என்றும் தனது கருத்தை பதிவு செய்துள்ளது., இதன் காகிதம் அச்சுக் கட்டணம் அனைத்தும் நேர்த்தி என்றும், தனது குறிப்பை பதிவு செய்திருக்கிறது”[8]

**திருவண்ணாமலையில் சொற்பொழிவு.**

சைவத்தை வளர்த்த சதாசிவம், திருமுறை கோயில்கள் எங்கு உள்ளன என்று முதன்முதலில் கண்டுபிடித்து, அவற்றுக்கு தடயங்கள் தேடி, அவர் போக்குவரத்து இல்லாத காலத்தில் பாடல் பெற்ற திருக்கோயில்களுக்குச் சென்று, வழிபாடு செய்து, கோயில்கள் பற்றிய குறிப்புகளை சேகரித்து, அதனைப் புத்தகமாக எழுதி வெளியிட்டுயிருக்கிறார்.. .

திருவண்ணாமலை கோயிலில் புரவி மண்டபத்தில் கீழ்ப்புறத்தில் ந.சி.முனுசாமி அவர்களால் கட்டப்பட்ட கட்டிடத்தில் நவராத்திரி ஆறாம் நாள் விழாவில் அவர் தன் பொருள் செலவில் அவ்விடத்தில் அடியார்க்கு அன்னம் பாலித்து வந்தார். ஞானியார் சுவாமிகளின் தலை மாணவராக மா.ரா.குமாரசாமி அவர்கள் ஒரு முறை விழாவுக்கு சென்றபோது வசதியான இந்த இடத்தில் ஒரு சபையை நிறுவி அதனை சிறப்பாக நடத்தலாமே என ஆலோசனை கூறினார் அங்கனமே சக்தி விலாச சபையும் அதன் அங்கமாக, ஒரு நூல் நிலையமும் எழுப்பினார். 19.5.1916 இல் அதன் முதலாம் ஆண்டு விழா தொடங்கி மூன்று தினங்கள் நடைபெற்றது. அந்த விழாவில் கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றி யிருக்கிறார். “[9]

மற்றொரு புத்தகமான திருஞானசம்பந்தர் என்ற புத்தகத்தில் பக்கம் 63 பக்கத்தில்,”திரு சதாசிவம் அவர்கள் கூறுகின்ற கருத்து இடம்பெற்றுள்ளது. திருமுறைகண்ட காலத்து காணப்பட்ட திருப்பதிகங்கள் முறையை பண்ணும் கட்டளையும் கண்டு தொகுக்கப்பட்டது என்றும், திருமுறைகண்ட புராணம் கூறுவது அவ்வாறு பண்ணுடைவு பெற்ற திருப்பதிகங்கள் 384 ஆயின. பண்ணமைதி பெறாத யாழ்மூரியும் கொல்லி வெள்ளிப் பதிகமும் சேர திருஞானசம்பந்தர் பாடியனவென இன்று நமக்குக் கிடைக்க வேண்டிய திருப்பதிகங்கள் 386 பதியங்களே கிடைத்துள்ளன.

ஆனால் பொதுவகையில் 384 பதியகங்களே கிடைத்துள்ளன. திருமுறை வகுக்கப்பெற்ற பின்பும் இரண்டு திருப்பதிகங்கள் மறைந்தன என கருத வேண்டியிருக்கிறது. திருப்பதிகம் ஒவ்வொன்றிற்கும் 11 பாட்டுக்கள் திருஞானசம்பந்தரால் பாடப் பெற்றுள்ளன. அவற்றுள் திருவெழுகூற்றிருக்கை ஒன்றுமே தனிபாட்டாய் அமைந்ததுள்ளது. ஏனைய யாவும் பதினோரு பாட்டுக்கள் கொண்ட திருப்பதிகங்களே ஆகும். ஆகவே அவற்றின் அடங்கிய பாட்டுக்களின் தொகை 4213 ஆதல் வேண்டும். அவற்றோடு திருவெழுகூற்றிருக்கை சேர திருப்பாட்டுகளின் தொகை 4214 ஆக வேண்டும். ஆனால் இப்போது கிடைப்பன 4181 ஒரு திருப்பாட்டுக்களே. இவற்றுள் சில பதகங்களில் பன்னிரு திருபாட்டுகளும், சிலவற்றில் ஏழு பாட்டுகளும், சிலவற்றில் எட்டும் பாட்டுக்களும் சிலவற்றில் ஒன்பதும் சிலவற்றில் பத்தும் உள்ளன என்று திருமறைக்காட்டுத் திருப்பதிகங்களில் விடைத்தகர் எனத் தொடங்குவது இவ்வாறு திரு செட்டியார் அவர்கள் கூறுவதற்கு சான்று ஒன்றும் தெரிந்திலது.

**கோயம்புத்தூரில் சதாசிவம்**

“சி.கே சுப்ரமணியம் தன்னுடைய தந்தை சைவ சித்தாந்தத்தின் மீது ஈடுபாடு உடையவர் என்றும், அவருடைய வீட்டிற்கு சைவத்தின் மீது ஈடுபாடு கொண்ட பெரியவர்கள் வந்து செல்வது வழக்கம் என்றும், அப்படி வந்து சென்றவர்களில் கயப்பாக்கம் சதாசிவம் ஒருவர் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். .சதாசிவம் அவர்கள் சுப்பிரமணியம் வீட்டில் தங்குவது என்றும், அப்படித் கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் கோயம்புத்தூரில் சிலகாலம் தங்கி பெரியபுராணம் சம்பந்தமாக உரையாற்றியபோது, அவருக்காக கையேடு படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அது முதல் பெரியபுராணத்தின் மீது ஈடுபாடு ஏற்பட்டது’ என்று தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**சதாசிவம் அவர்களுடன் சி.கே.எஸ் அவர்கள்.**

”கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் சொற்பொழிவின் போது சி கே எஸ் அவர்கள் கையேடு படிப்பார்கள். அத்துடன் சதாசிவம் அவர்கள் சொல்லும் கவிநயம்,தேவார ஒப்புமைப் பகுதி முதலியவற்றை எழுதி வைத்துக் கொள்வார். இவற்றையே சி கே எஸ் அவர்கள் விரிவாக்கி பெரியபுராணம் பேருரை என பல பகுதிகளாக வெளியிட்டார். இதிலும் ஒரு ஒற்றுமை. கயப்பாக்கம் ஐயா அவர்கள் பெரியபுராணம் நடத்த, சீ கே எஸ் அவர்கள் பெரியபுராணப் பேருரை வழங்கினார்கள். கயப்பாக்கம் ஐயா பெரியபுராணம் சொல்ல, சி கே எஸ் உரை எழுதினார்கள்.”[10]



*©2023 by* KRISHMA PUBLICATION

**"வைப்புத்தலங்கள்" தியாகி நாராயணசாமி நாயுடு கட்டுரை**

சித்தாந்தம் என்ற தலைப்பில், சைவ இதழில் 1962 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மலர் முப்பத்தி ஆறு, இதழ் பதினொன்றில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையில், கயப்பாக்கம் சதாசிவம் அவர்களைப் பற்றி குறிப்பு காணப்படுகிறது .தியாகி நாராயணசாமி நாயுடு அவர்களால் "வைப்புத்தலங்கள்" என்ற தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ள கட்டுரையில் கீழ்காணுமாறு செய்திகள் அதில் தரப்பட்டுள்ளது

" நடைமுறையில் தேவாரப் பதிகம் உள்ள ஊர்களைப் பாடல் பெற்ற தலம் என்றும் பதிகம் பெற்றோ, பெறாமலே, இன்று பதிகம் இன்றி தேவாரப் பாசுரங்களில் காணப்படும் திருப்பதிகங்களை வைப்புத் தலம் என்று கூறுவது மரபு .வைப்புத் தலங்களில் பல இருக்கும் இடம் தெரியவில்லை ஆனால் இவை யாவை என அறிய, முதன் முதல் தேவாரப் பதிப்புகளில் அச்சிட்ட வைப்புத்தலம் பட்டியல்களை அடிகோலிய வைப்புத்தலங்கள் தொகுத்துக் கூறும் தனி பாடல்கள் 7 தனியே வழங்கி வருகிறது அது ஆய்வின்றி வெளிவந்தது.

முதன்முதல் வைப்புத்தலம் பட்டியலுடன் வெளிவந்த தேவார பதிப்பு ராமசாமி பிள்ளை தலைமுறை பதிப்பாகும்.வைப்புத்தலம் பட்டியலில் இல்லாத பண்முறை பதிப்புகள் பல வெளிவந்தன அவை வருமாறு.

கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பார்வையிட்ட கழகப் பதிப்பு 1927-1929 ல் வெளிவந்தன. சமாஜம் 1929 -31 வெளியிட்டது .திருப்பனந்தாள் மடத்து பதிப்பு 1949 ஐம்பதில் ஆசிரியர் முறையில் தனித்தனியே தலைமுறையில் வெளிவந்தன .மேலே காட்டிய பதிப்புகளில் கண்டவை பட்டியல்களை கீழ்க்காணுமாறு பார்க்கலாம் பக்கம்"[11]

**சென்னையில் சைவத்தொண்டு**

"சென்னையில் வாழ்ந்த கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் ஆங்கிலம் வடமொழி தென்மொழி மூன்றிலும் பாண்டித்தியம் பெற்றவர். அரசு அலுவலராக இருந்து, ஓய்வு பெற்று, சிவரகசியம் என்னும் பேர் இதிகாசத்தை பதிப்பிக்க தொடங்கினார். உருக்கமாக பேசக்கூடியவர். செய்யுள்களுக்குச் சிறந்த உரை நிகழ்த்தக் கூடியவர். அவர் கோவையில் பெரியபுராணத்தை பற்றி முறையாக பேருரை நிகழ்த்தினார்." [12]

**ஜீவகாருண்யம்**

"கயப்பாக்கம் சதாசிவம், வள்ளலார் அவர்களின் ஜீவ காருண்யம் கோட்பாட்டில் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். வள்ளலார் கோட்பாட்டை பற்றி சைவ சமய மேடைகளில் பேசி மக்களிடையே விழிப்புனர்வை ஏற்படுத்தினார். ஓரறிவு படைத்த பிராணிகளிடம் கருணை காட்டுவதது அவசியம் என்று வலியுருத்தினார்"[13]

**சைவசமய பக்த ஞான சபை 1904**

"சென்னை மாநகரில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் சைவ அமைப்புகளில் ஒன்று சைவ சமய பக்த ஞானசபை ஆகும். அதேபோல தனக்கென தனி கட்டிடம் உள்ள சில அமைப்புகளுள் இதுவும் ஒன்றாகத் திகழ்கின்றது. சைவசமய பக்த ஞான சபை கயப்பாக்கம் சதாசிவம் அவர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது"[14]

**குடி அரசு-வார பதிப்பு-குறிப்பு.**

சைவத் திருமுறை பன்னிரண்டு, அழகிய திருஉருவப் படங்களுடன் என்ற ஒரு விளம்பரம் குடிஅரசு இதழில் 1929 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. அதன் முழு விளக்கம் கீழ்வருமாறு இது திருமுறை ஆராய்ச்சியில் வல்ல கயப்பாக்கம் சதாசிவம் அவர்களால் பார்வையிடப் பெற்று ஆறு பகுதிகளாக டெம்மி 8 பக்க அளவில் பதிக்கபெறுகின்றது.

"பதிகக் குறிப்பு, அருஞ்சொற் கோவை, அருஞ் சொற்றொடர் கோவை, நூல் வரலாறு ஆசிரியர் வரலாறு, பண் அட்டவணை, தல அட்டவணை, நாடுகளின் அட்டவணை, பண் விளக்கம் முதலியன பல தலைப்புகளில் பாட்டு, முதற்குறிப்பகராதி, ஆசிரியர் திரு உருவப்படங்கள், அற்புத படங்கள், முதலியன திருமுறை யாராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன் தரத்தக்க முறையில் எழுதிச் சேர்க்கப் பெறுகின்றன. சிறிது தமிழ் கற்றாரும் எளிதில் படித்து உணருமாறு செய்யுட்கள் பண்ணிற் கேட்பசீர் பிரிக்க பெற்றிருக்கின்றன. இப்படி குடியரசு இதழில் கொடுக்கப்பட்டுள்ள விளம்பரத்தில் மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன. முன் பணம் அனுப்புவர்களுக்கு விலையில் சலுகை உண்டு என்பதையும், சம்பந்தர் தேவாரம் ஒரு பகுதி சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரம் மூன்று பகுதிகள்.தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருமந்திரம், பதினோராம் திருமுறை, பெரியபுராணம் ஆறு பகுதிகள் அதனுடைய விலை நிலவரம் கொடுக்கப்பட்டுள்ளது.குறிப்பு என்று சில முக்கிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லிமிடெட்) 306 லிங்க செட்டி தெரு சென்னை "[15]

**சத்வித்யா சன்மார்க்க சங்கம்**

[16]"கோவை பேரூராதீனத்தின், "சத்வித்யா சன்மார்க்க சங்கம் 1913 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இச்சங்கத்தில் உரையாற்றிய சான்றோர்கள் என ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.அப் பட்டியலில் திரு கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் பெயரும் இடம் பெற்றுள்ளது." நூற்றாண்டை கடந்து இச் சங்கம் இன்றும் திரு கயப்பாக்கம் சதாசிவம் அவர்களின் சைவ சமயத்திற்கு ஆற்றிய பங்களிப்பை நினைவு கூறுகிறது."[16]

**கந்தகோட்டத்தை சீரமைத்தல்**

கந்த கோட்டத்தில் நால்வர் உற்சவ மூர்த்திகள், கலிக்கம்ப நாயனார், இயற்பகை நாயனார், மூர்த்தி நாயனார், புனிதவதியார், அமர்நீதி நாயனார், சேக்கிழார் பெருமான், குங்குலியக் கலய நாயனார் மற்றும் சிவனேசன் பூம்பாவையார் திருவுருவங்களை பிரதிட்டை செய்வித்துக் குடமுழுக்கு நடத்திவைத்தார்.

**தக்கோலத்தில் நடராஜபெருமானுக்கு விழா நடத்துதல்**

திருவூறல் எனும் தக்கோலத்தில் நடராஜ பெருமான் திருவுருவம் ஒன்று செய்வித்து குடமுழுக்கு செய்துவைத்தார். சிதிலமடைந்துகிடந்த திருச்சிராப்பள்ளி என்ற ஊரில் உள்ள திருக்கோயிலை செப்பம் செய்து, நண்பர்கள் உதவியுடன் குடமுடுக்கு செய்து முடித்தார். திருவேற்காட்டில் சித்ரா பௌர்ணமி அன்று ஆற்று உற்சவம் எனப்படும் சமஸ்தான உற்சவத்தை ஏற்பாடு செய்து நடத்தினார்.

**இறைவன் திருவடி நிழலை அடைதல் 1929**

சபைக்கு ஒரு சொந்த கட்டிடம் கட்ட எண்ணினார். சதசிவம் அவர்கள் வைசிய குல பேரி செட்டியார்கள் வீடுகளில் நடைபெறும் திருமணம் முதலிய நன் நாட்களில், நன்கொடை வாங்குவதை ஒரு வழக்கமாக பின்பற்றினார்.இதனால் ஏராளமான பணம் வசூல் ஆயிற்று. இவ்வாறு அரும்பணிகள் ஆற்றிய சதாசிவம் அவர்கள் 1929 ஆம் ஆண்டில், தமது 57 ஆவது வயதில் இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.'[17]

**முடிவுரை**

கயப்பாக்கம் சதாசிவம் அவர்கள் தனது வாழ்நாள் முழுவதும் சைவ சமயத்தின் கருத்தாக்கங்களை மக்களிடத்தில் எடுத்துச் சென்று சேர்ப்பதிலும், அவர்கள் மனதில் சைவ சமய வாழ்வியல் நெறிகளை பதியவைப்பதிலும் இடைவிடாமல் பரப்புரை முயற்சியினை செய்துகொண்டிந்தார்.

**ஆய்வுக்குறிய புத்தகங்கள்**


1. தமிழ் வளர்த்த ஞானியாரடிகள் பக்கம் 141
2. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்பகம் 1973
3. சைவ இலக்கிய வரலாறு
4. வணிதையர் –முன்னுரை
5. முன்னுரை மாருதி பிரஸ் 83-பீட்டர்ஸ் ரோடு சென்னை-14 வெளியீடு ஸ்ரீ கந்தப்பெருமான் தேவத்தானம் திருப்போரூர் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் மூலமும் விளக்க உரையும் பாலூர் கண்ணப்ப முதலியார்.-தமிழ்த்துறை தலைவ்ர். புதுக்கல்லூரி சென்னை.
6. பா.இளமாறன் (ஜெய்கனேஷ்) – இணையதளம்.
7. ஊரெல்லாம் சிவ மணம்- பக்கம்- 33 இரா. இராஜசேகரன்- நர்மதா வெளியீடு
8. வலம் – இணையதளம்- எஸ்.சொக்கலிங்கம்.
9. தென்றல் – இணையதளம்-2014 பதிப்பு.
10. ஊரெல்லாம் சிவ மணம்-பக்கம் 238-240 இரா. இராஜசேகரன்- நர்மதா வெளியீடு.
11. 1962-நவம்பர்—மலர் 36-இதழ் 11. பக்கம் 321-328.
12. ஊரெல்லாம் சிவ மணம்- பக்கம் -262 இரா. இராஜசேகரன்- நர்மதா வெளியீடு.
13. ஊரெல்லாம் சிவ மணம்- பக்கம் -267 இரா. இராஜசேகரன்- நர்மதா வெளியீடு.
14. ஊரெல்லாம் சிவ மணம்- பக்கம் – 30 இரா. இராஜசேகரன்- நர்மதா வெளியீடு
15. குடி அரசு - வார பதிப்பு- புரட்டாசி. ஈரோடு 19.09.1926.
16. சங்கர்"-வலைதளம்.
17. "தமிழ் வளர்த்த ஞானியார் அடிகள் புத்தகத்தில் பக்கம் 141.


*****